©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 18] சென்னை, புதன்கிழமை, மே 9, 2012
சித்திரை 27, திருவள்ளுவர் ஆண்டு–2043

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

### வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை

#### அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 16, வணிகவரிகள் மற்றும் பதிவு (B2)த் துறை, 24 ஜனவரி 2012.]*

தமிழ்நாடு **2006** ஆம் ஆண்டு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் **32/2006**) **30** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)**, **(2)** ஆகிய உட்பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், டயாலிசஸ் செய்வதற்கு தேவைப்படும் மருத்துவப் பொருட்கள், மருத்துவ சாதனங்கள் அல்லது உபகரணங்கள் மற்றும் துணைப் பொருட்களை சென்னை–**600 034**–இல் உள்ள திருவாளர்கள் தமிழ்நாடு சிறுநீரக ஆராய்ச்சி நிறுவனத்திற்கு விற்பனை செய்வதன் பேரில், மேற்சொன்ன சட்டத்தின் கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியிலிருந்து பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இதனால் விலக்களிக்கிறார்.

(i) விற்பனையாளர், வரிவிதிப்பு அதிகாரிக்கு அளிக்கும் மாதாந்திர விவர அறிக்கையுடன், கீழே இணைக்கப்பட்ட கடிதத்தில் சென்னை–**600 034**–இல் உள்ள திருவாளர்கள் தமிழ்நாடு சீறுநீரக ஆராய்ச்சி நிறுவனத்தால் உரியவாறு நிரப்பப்பட்டு கையொப்பமிட்ட உறுதிமொழி ஒன்றினை விற்பனையாளர் அளிக்க வேண்டும்.

(ii) சென்னை–**600 034**–இல் உள்ள திருவாளர்கள் தமிழ்நாடு சிறுநீரக ஆராய்ச்சி நிறுவனத்தை நடத்துவதற்கான உண்மையான பயன்பாட்டிற்காக பொருட்கள் வாங்கப்பட வேண்டும்; மற்றும்

(iii) மேற்சொன்ன நிறுவனமானது மேற்சொன்ன பொருட்களுக்கான விலையைக்காட்டிலும் கூடுதலாக வசூலிக்கக்கூடாது மற்றும் ஆதாயம் தரும் ஆதாரமாகவும் இருக்கக்கூடாது.

**2.** இந்த அறிவிக்கை, **1–4–2012** அன்றிலிருந்து செயலுக்கு வருவதுடன், **31–3–2014** அன்று வரையிலும் அந்நாள் உட்படவும் செயலில் இருக்கும்.

**பிற்சேர்க்கை**

**உறுதிமொழி**

**1.** வணிகரின் பெயர் மற்றும் முழு முகவரி

**2.** வணிகரின் வரி கட்டுபவர் குறியீட்டு எண் (TIN):

மேற்சொன்ன வணிகரிடமிருந்து, சென்னை–600 034–இல் உள்ள திருவாளர்கள் தமிழ்நாடு சிறுநீரக ஆராய்ச்சி நிறுவனத்தின் உண்மையான பயன்பாட்டிற்காக பின்வரும் பொருள்கள் எங்களால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன என்று சான்றளிக்கப்படுகிறது.

| தொ. எண் | பொருள்களின் விவரம்* | பட்டிஎண் மற்றும் நாள் | பொருள்களின் மதிப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |

* தேவையற்றதை அடித்துவிடவும்

சென்னை–600 034இல் உள்ள
திருவாளர்கள் தமிழ்நாடு சிறுநீரகஆராய்ச்சி
நிறுவனத்திற்காகவும் மற்றும் அதன் சார்பாகவும்.
உறுதிமொழியில் கையொப்பமிடுகின்ற
நபரின் கையொப்பமும் தகுதிநிலையும்.
முத்திரை

**சுனில் பாலிவால்,**
*அரசுச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 16, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி (UD 4(2))த் துறை, 12 ஜனவரி 2012.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்பு திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 17 ஏப்ரல் 1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2இல் 220 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் II(2)/RUL/2154/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை செய்வதுடன், கோவில்பட்டி உள்ளூர் திட்டப் பகுதியில், கூடுதல் பகுதிகளைச் சேர்ப்பதற்கான அவருடைய கருத்தினை இதனால் தெரிவிக்கிறார்.

**2.** இந்த வரைவுத்திருத்தம், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன காலஅளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக உள்ளூர் பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளரிடமிருந்து அல்லது யாதொரு உள்ளூர் அதிகார மன்றத்திடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை, தமிழ்நாடு அரசு உரியவாறு பரிசீலிக்கும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை, அரசுச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள "அட்டவணைக்கு" பதிலாக, கீழ்க்கண்ட அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

"அட்டவணை

| தொடர் எண். | உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர். | உள்ளூர் திட்டப் பகுதியாக அமையும் பகுதி வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | **கோவில்பட்டி வட்டம் (பகுதி).** |
| 1. | கோவில்பட்டி | 84. கோவில்பட்டி (பகுதி) |
| | | 49. இலுப்பையூரணி (பகுதி) |
| | | 33. முடுக்குமீண்டான்பட்டி |
| | | 35. தோனுகால் |
| | | 36. கங்கன்குளம் |
| | | 37/1 & 2 ஆலம்பட்டி |
| | | 38. மணியாச்சி (இ) |
| | | 40. ஆவல்நத்தம் |
| | | 41. இலுப்பையூரணி (பகுதி) |
| | | 42. பூசாரிப்பட்டி |
| | | 43. லிங்கம்பட்டி |
| | | 44. திட்டங்குளம் |
| | | 45. பாண்டவர் மங்கலம் |
| | | 46. மந்தித்தோப்பு |
| | | 47. கிழவிப்பட்டி |
| | | 48. கொடுக்காம்பாறை |
| | | 49. சிவந்திப்பட்டி |
| | | 50. ஊத்துப்பட்டி |
| | | 84. கோவில்பட்டி (ஊரகப்பகுதி) |
| | | 278. அப்பனேரி |
| | | 313. சித்திரம்பட்டி |
| | | 323. அய்யனேரி |
| | | 329. புளியங்குளம் |
| | | **எட்டியபுரம் வட்டம் (பகுதி)** |
| | | 20. அய்யாக் கேட்டையூர் |
| | | 21. உருளைக்குடி |
| | | 22. காட்டாராமன்பட்டி |
| | | 23. கடலையூர் |
| | | 24. சின்னமலைக்குன்று |
| | | 25. மீனாட்சிபுரம் |
| | | 26. நாவலக்கம்பட்டி |
| | | 36. எட்டயபுரம் பேரூராட்சி |
| | | 37. இளம்புவனம் |
| | | 40. குமரகிரி |
| | | 41. சிதம்பரபுரம்". |

**கே. பணீந்தரரெட்டி,**
*அரசுச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 203, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி [UD 4(2)]த் துறை, நாள் 30 டிசம்பர் 2011.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்பு திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 6 நவம்பர் 1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–இல் 556–557 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் II(2)/RUL/4632/74 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை செய்யக் கருதியிருப்பதையும் காஞ்சிபுரம் உள்ளூர் திட்டப்பகுதியில், கூடுதல் பகுதிகளைச் சேர்க்கக் கருதிய அவருடைய நோக்கத்தையும் இதனால் அறிவிக்கிறார்.

**2.** இந்த வரைவுத்திருத்தம், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன காலஅளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக உள்ளூர் பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளரிடமிருந்து அல்லது யாதொரு உள்ளூர் அதிகார மன்றத்திடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை, தமிழ்நாடு அரசு உரியவாறு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை, எழுத்துமூலமாக ''அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009'' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

### வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள "அட்டவணைக்கு" பதிலாக, கீழ்க்கண்ட அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

### ''அட்டவணை

| *தொடர் எண்.* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்.* | *உள்ளூர் திட்டப் பகுதியாக அமையும் பகுதி.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | காஞ்சிபுரம் | (1) 22 சிறுகாவேரிபாக்கம் |
| | | (2) 23 நெட்டேரி |
| | | (3) 24 அச்சுக்கட்டு |
| | | (4) 25 சாலபோகம் |
| | | (5) 26 புத்தேரி |
| | | (6) 27 கீள்கதிர்பூர் |
| | | (7) 28 நொளும்புப்பட்டடை |
| | | (8) 40 கமுகம்பள்ளம் |
| | | (9) 53 தேனம்பாக்கம் |
| | | (10) 55 சின்னனய்யங்குளம் |
| | | (11) 56 ஓரிக்கை |
| | | (12) 57 வெளிக்கப்பட்டடை |
| | | (13) 58 செவிலிமேடு |
| | | (14) 60 குண்டுகுளம் |
| | | (15) 61 திருப்பருத்திக்குன்றம் |
| | | (16) 62 விஷ்ணுகாஞ்சி |
| | | (17) 63 கொட்டைக்காவல் |
| | | (18) 71 கருப்படித்தட்டடி |
| | | (19) 72 செண்டுவெளி |
| | | (20) 73 ஏரிவாக்கம் |
| | | (21) 74 கள்ளகம்பன்பட்டடை |
| | | (22) 75 பாப்பாங்குழி |
| | | (23) 76 திம்மசமுத்திரம் |
| | | (24) 78 கோனேரிகுப்பம் |
| | | (25) 79–1 காரப்பேட்டை |
| | | (26) 79/2 காரப்பேட்டை |
| | | (27) 84 நத்தப்பேட்டை |
| | | (28) 85 அபாப்பணஞ்சேரி |

| *தொடர் எண்.* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்.* | *உள்ளூர் திட்டப் பகுதியாக அமையும் பகுதி.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | காஞ்சிபுரம் | (29) 87 திருக்காலிகாடு<br>(30) 88 திருவீதிப்பள்ளம்<br>(31) 89 பெரியதோட்டம்<br>(32) 90 தாட்டிதோப்பு<br>(33) 91 நசரத்பேட்டை<br>(34) 92 முத்தியால்பேட்டை<br>(35) 99 திம்மைப்பையன்பேட்டை<br>(36) 100 அய்யம்பேட்டை<br>(37) 64 ஓடைப்பட்டடை<br>(38) 65 அஸ்தகிரிபட்டடை<br>(39) 66 முல்லாபாளையம்<br>(40) 67 பரமேஸ்வர வின்னகரம்<br>(41) 68 அசனாபாத்பட்டடை<br>(42) 69 லாலாதோட்டம்<br>(43) 70 திருமல்ராயன்தோட்டம்<br>(44) 86 உப்புக்குளம்<br>(45) 20 மேலம்பி<br>(46) 21 கீழ் அம்பி<br>(47) 35 அய்யங்கார்குளம்<br>(48) 36 புஞ்சரசஞ்தாங்கல்<br>(49) 37 வளத்தோட்டம்<br>(50) 39 களகட்டூர்<br>(51) 40 குருவி மலை<br>(52) 42 வேடல்<br>(53) 47 ஏரிவாய்<br>(54) 48 படப்பம்<br>(55) 61 சித்தேரிமேடு<br>(56) 63 திருமால்பாடிதாங்கல்<br>(57) 64 நல்லூர்<br>(58) 65 வையாவூர்<br>(59) 73 வில்லிவலம்<br>(60) 75 திம்மராசம்பேட்டை<br>(61) 76 தாங்கி<br>(62) 77 நாயக்கன்பேட்டை<br>(63) 78 ஏக்கனாம்பேட்டை<br>(64) 81 வள்ளுவப்பாக்கம்<br>(65) 82 பூசிவாக்கம்<br>(66) 83 பாவாசாகிபுபேட்டை<br>(67) 97 ஏனாத்தூர்<br>(68) 98 சேமந்தாங்கல்<br>(69) 121 காரை". |

**கே. பணீந்தரரெட்டி,**
*அரசுச் செயலாளர்.*

/தமிழாக்கம்/

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

**சட்டத் துறை**

***அறிவிக்கை***

*[அரசாணை (நிலை) எண் 192, சட்டத் துறை , நாள் 23 அக்டோபர் 2012.]*

**1882** ஆம் ஆண்டு உடைமை உரிமை மாற்றுச் சட்டத்தின் **58** ஆம் பிரிவின் பகுதி (f) இன் படியும், மேற்சொன்ன சட்டத்தின் **58**ஆம் பிரிவின் பகுதி (f) இன்கீழ் வெளியிடப்பட்ட அனைத்து அறிவிக்கைகளையும் ரத்து செய்து தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் **58** ஆம் பிரிவின் பகுதி (f) யின் வழிவகைகள் பொருந்தும் வகையிலான நகரங்களாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளையும் இதனால் குறிப்பிடுகிறார்.

**ஜி. ஜெயச்சந்திரன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.